**செய்தி வெளியீடு எண்:495** **நாள் :09.10.2014**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

தமிழ்நாட்டில் மாவட்ட மனநலத் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், மன நோயாளிகளுக்கும், மனநோய்க்கும் எளிதில் இலக்காகும் நபர்களுக்கும், சிறப்பான மருத்துவ சிகிச்சை ஆரம்ப சுகாதார நிலையம், தாலுகா மருத்துவமனைகள் மற்றும் அரசு தலைமை மருத்துவமனகளில் அளிக்கப்பட்டு வருவதாகும். இத்திட்டம் அமுலாவதற்கு முன் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலோ, பெருநகரங்களில் உள்ள மனநல மருத்துவர்களிடம் மட்டுமே சிகிச்சை பெற முடிந்தது. இதனால் அதிகமான பொருட் செலவும், நேரமும், உடன் வருபவர்களின் நேர இழப்பும், ஏற்பட்டு வந்தது, சிகிச்சையின் இடையே தவிர்க்க இயலாத காரணத்தால், தொடர் சிகிச்சை எடுக்க இயலாத நிலை இருந்து வந்தது. இத்திட்டம் அமுலாக்கிய பின்னர் மனநோயாளிகள் அதிக அளவில் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே சிகிச்சை பெற்றும், குணமடைந்தும் வருகிறார்கள். கீழ்க்காணும் மாவட்டங்களில் மனநல மருத்துவர்களுக்கு தொழில் நுட்ப உதவி அளிக்க உளவியல் நிபுணர்கள் (Clinical Psychologist) மற்றும் சமூக நலப்பணியாளர்கள்(Social Worker) தேவைப்படுகிறார்கள் விவரம் வருமாறு :–

| வ எண் | மாவட்டம் | உளவியலாளர்கள் (clinical Psychologist) | சமூக நலப்பணியாளர்கள் (Social Worker) |
|---|---|---|---|
| 1 | கடலூர் | –– | ஒரு காலி பணியிடம் |
| 2 | தர்மபுரி | ஒரு காலி பணியிடம் | –– |
| 3 | நாமக்கல் | ஒரு காலி பணியிடம் | –– |
| 4 | பெரம்பலூர் | ஒரு காலி பணியிடம் | –– |
| 5 | கன்னியாகுமரி | –– | ஒரு காலி பணியிடம் |
| 6 | தேனி | –– | ஒரு காலி பணியிடம் |
| 7 | விருதுநகர் | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 8 | திண்டுக்கல் | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 9 | கரூர் | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 10 | புதுக்கோட்டை | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 11 | சிவகங்கை | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 12 | திருவண்ணாமலை | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 13 | திருநெல்வேலி | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |

| | | | |
|---|---|---|---|
| 14 | திருப்பூர் | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 15 | தூத்துக்குடி | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |
| 16 | விழுப்புரம் | ஒரு காலி பணியிடம் | ஒரு காலி பணியிடம் |

**இப்பணி முழுக்க தற்காலிகமானதாகும்.** தகுதிகள் மற்றும் தொகுப்பூதியம் கீழே தரப்பட்டுள்ளன.

**1. மனநல உளவியல் நிபுணர்கள் (Clinical Psychologist)**

**தகுதி**

**M.Phil., (Clinical Psychology)**
அல்லது
**M.A.,/M.Sc., (Psychology)**
மற்றும்
இத்துறையில் ஆறுமாத பயிற்சி பெற்ற அனுபவம்

**2. சமூக நல பணியாளர்கள் (Social Worker)**

**Master of Social Work (MSW) (Medical & Psychiatry)**
அல்லது
**M.A., (Social Work Medical & Psychiatry)** சமூக நலப்பணி மனநலம் பயின்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்கண்ட பணிகளுக்கு வயது வரம்பு இல்லை. சொந்த மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். உளவியலாளர்களுக்கு மாத தொகுப்பூதியமாக ரூ.13000/– மற்றும் சமூக நல ஊழியர்களுக்கு மாத தொகுப்பூதியமாக ரூ.10000/–ம் வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள் அவர்களது விண்ணப்பத்தினை **31.10.2014** க்குள் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு தங்களின் பெயர், பிறந்த தேதி, கல்வித்தகுதி, சொந்த மாவட்டம், சான்றிதழ்களை இணைத்து (attested ஜெராக்ஸ் நகல்) மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியை குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,
(மாவட்ட மனநலத்திட்டம்) (தொகுப்பூதிய பணியிடம்) ,
டி.எம்.எஸ்.வளாகம், தேனாம்பேட்டை, சென்னை–6.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**